# இளம் பிரஜைகளை தேருநர் இடாப்பிற்குள் உட்சேர்த்தல்

இளம் பிரஜைகள் தங்கள் பெயரை தேருநர் இடாப்பிற்குள் உட்சேர்த்துக்கொள்வதற்கு தற்போது இலகுவாக நிகழ்நிலையின் ஊடாக விண்ணப்பிக்க முடியும்.

01. அதற்காக https://eservices.elections.gov.lk/ என்ற தேர்தல் ஆணைக்குழுவின் இ சேவை வலைத்தளத்திற்குட் பிரவேசிக்கவும்.

02. இ சேவை கணக்கொன்று இதுவரையில் தயாரித்து இருக்காவிடின் Sigh Up ற்குட் பிரவேசித்து அதனைத் தயாரித்துக் கொள்ளவும்.




03. கணக்கினைத் தயாரிக்கும் போது கடவுச்சொல்லிற்காக (Password) ஆங்கில பெரிய எழுத்து, சிறிய எழுத்து, இலக்கம் மற்றும் @,#,&,!,~ போன்ற சிறப்பு குறியீடுகள் (அனைத்து வகையிலும் ஒன்றேனும் இருத்தல் வேண்டும்) உள்ளடங்கக் கூடிய விதத்தில் தயாரித்துக் கொள்ளவும். [உ+ம் - KAsun@2540.mee]

04. கணக்கினைத் தயாரிப்பதில் தெளிவின்மை இருக்குமாயின் அங்கு Instructions என்பதன் கீழுள்ள அறிவுறுத்தல்களை வாசிக்கவும்.

05. நீங்கள் தயாரித்துக் கொண்ட கணக்கின் பயனர் பெயர் (12 இலக்கங்களை கொண்டது) மற்றும் தயாரித்துக் கொண்ட கடவுச்சொல் என்பவற்றைப் பயன்படுத்திக் கணக்கிற்குட் பிரவேசிக்கவும்.

06. பிரஜைகளுக்காக வழங்கப்பட்டுள்ள இணைப்பில் இளம் பிரஜைகளைப் பதிவுசெய்தல் என்பதிற்குட் பிரவேசிக்கவும்.




07. **தேர்தல் மாவட்டம் :** என்பதில் உங்களுக்குரிய தேர்தல் மாவட்டத்தைத் (மாவட்டம்) தெரிவு செய்க.

08. **குடும்பத் தலைவரின் தே.அ.அ.இ :** என்ற இடத்தில் தந்தை / தாயின் ( நீங்கள் வசிக்கும் இல்லத்திலுள்ள தேருநர் இடாப்பில் பதிவு செய்யப்பட்டுள்ள நபர்) அடையாள அட்டை இலக்கத்தை உட்செலுத்தி ✓என்ற குறியீட்டை இடவும்.

09. அப்போது கீழே காணப்படும் தகவல்கள் பூரணப்படுத்தப்படும். அவ்வாறு இல்லையாயின் நீங்கள் உங்களுக்குரிய தகவல்களை உட்செலுத்தி அவற்றை சரியாகப் பூரணப்படுத்த வேண்டும்.

10. **பெயர்:** என்ற இடத்தில் உங்களது முழுப் பெயரை சிங்களம் / தமிழ் மொழியில் குறிப்பிடவும். (முதலெழுத்துக்களுடன் கூடிய பெயரை உட்படுத்தலாகாது). இப்பெயரே தேருநர் இடாப்பிற்குள் உட்சேர்க்கப்படும்.

© தேர்தல் ஆணைக்குழு – தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பப் பிரிவு
✉ eservices@elections.gov.lk

11. இணைப்பு என்ற பொத்தானை க்ளிக் செய்து உங்கள் அடையாள அட்டையின் புகைப்படத்தை (இருபுறமும்) உட்சேர்க்கவும். உட்சேர்த்து **"சமரப்பிக்குக"** என்பதைக் க்ளிக் செய்த பின் முதற் பக்கத்திற்குட் பிரவேசிக்கவும்.

12 "Im Not A Robot" என்பதற்கு எதிரிலுள்ள ☑ அடையாளத்தையிட்டு **"சமர்ப்பிக்குக"** என்ற பொத்தானை க்ளிக் செய்து விண்ணப்பத்தை சமரப்பிக்கவும்.

13 கையடக்கத் தொலைபேசியிற்கு கிடைக்கப் பெறும் குறியீட்டு இலக்கத்தை பாதுகாப்பாக வைத்துக் கொள்ளவும். தேவையேற்படின் மாத்திரம் **"பதிவிறக்குக"** என்பதை க்ளிக் செய்து உங்கள் நிகழ்நிலை விண்ணபப்படிவத்தின் மென்பிரதியொன்றை பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்.

14. விண்ணப்பத்தைச் சமரப்பிக்கும் போது ஏதேனும் தவறு ஏற்படின், மீண்டும் கணக்கிற்குட் பிரவேசித்து தவறை சரி செய்து மீண்டும் **"சமர்ப்பிக்குக"** பொத்தானை க்ளிக் செய்து விண்ணப்பத்தை சமர்ப்பித்தல் அத்தியவசியமாகும்.

15 இது தொடர்பாக தேவையான அறிவுறுத்தல்கள் பாவனைக்கான அறிவுறுத்தல்கள் என்பதன் கீழ் காட்டப்பட்டுள்ளது. அவ்வறிவுறுத்தல்களை வாசித்து இந்நடவடிக்கைகளை மேற்கொள்வது உங்களுக்கு இலகுவானது.